FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | சங்கீதம் | நேரம் :- இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி - I

❖ **01 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து புள்ளடியிடுக.**

01. யாழ்முரிப் பண்ணுக்குரிய இராகம் எது?
1. கானடா 2. அடானா 3. காம்போஜி 4. சங்கராபரணம் 5. நவரோஜ்

02. கீதகோவிந்தம் என்ற மகாகாவியத்தை அருளியவர் யார்?
1. புரந்தரதாசர் 2. ஷேத்ரக்ஞர் 3. வெங்கடமகி 4. ஜெயதேவர் 5. பாபநாசம் சிவன்

03. இராகத்திலோ சங்கதியிலோ வரக்கூடிய முடிவு ஸ்வரம் எவ்வாறு அழைக்கப்படும்?
1. நியாசம் 2. கிரகம் 3. பகுத்வம் 4. அம்சம் 5. தாரம்

04. வடஇந்திய சங்கீதத்தின் பிரதானமான தாளவாத்தியம் எது?
1. கெஞ்சிரா 2. முகர்சிங் 3. மிருதங்கம் 4. தபேலா 5. டோலக்

05. “ஸாலோக பதவியும் தந்தோம் தந்தோம் என்றாடிய பாதா…” என்ற சரண வரிகள் உள்ளடங்கும் அணி.
1. சொற்கட்டு சாகித்தியம் 2. ஸ்வரசாகித்தியம் 3. சொற்கட்டு சாகித்தியம்
4. மகுடசாகித்தியம் 5. யமகம்

06. “தத்த தீம்த தீம் தனதிரன….” என்ற சங்கராபரண இராக தில்லானாவை இயற்றியவர்.
1. பாபநாசம் சிவன் 2. திருக்கோகர்ணம் சுப்பய்யர்
3. Dr.பாலமுரளிகிருஷ்ணா 4. பொன்னையாப்பிள்ளை
5. மைசூர் சைடையா

07. சுருதி கூட ஒலிப்பதற்கு வசதி உள்ள வாத்தியத் தொகுதி.
1. புல்லாங்குழல், நாதஸ்வரம் 2. வயலின், வீணை 3. வயலின், கோட்டுவாத்தியம்
4. மிருதங்கம், தவில் 5. வீணை, கோட்டுவாத்தியம்

08. பல்லவி ஷேசையரால் எட்டு மணி நேரம் பாடப்பட்டதாகக் கூறப்படும் இராகம் எது?
1. சாவேரி 2. வசந்தா 3. ஆபோகி 4. சுத்தசாவேரி 5. பைரவி

09. “பாஹிதரஷுபு…..” என்ற சௌக்ககாலக் க்ருதியை அருளிய வாக்கேயகாரர்.
1. பாபநாசம் சிவன் 2. சுவாதிதிருநாள் மகாராஜா
3. கனம் கிருஷ்ணய்யர் 4. ஊத்துக்காடு வெங்கடசுப்பையர்
5. பட்ணம் சுப்ரமண்ய ஐயர்

The National e-learning Portal for The General Education

10. மனோதர்ம சங்கீதத்தில் இறுதியாகப் பாடப்படும் பகுதி எது?
1. இராகம் 2. தானம் 3. கற்பனாஸ்வரம் 4. நிரவல் 5. பல்லவி

11. யமன், கல்யாண், பூர்வி, பீலு, பஹார் போன்ற ஹிந்துஸ்தான் இராகங்களை உருவாக்கிய வாக்கேயகாரர்
1. பாக் 2. பீதோவன் 3. பாத்கண்டே 4. அமிர்குஸ்ரூ 5. மொஸாட்

12. திவிதீய கனபஞ்சக இராகம் அல்லாதது.
1. கேதாரம் 2. ரீதிகௌளை 3. பௌளி 4. நாராயணகௌளை 5. கௌளை

13. அயன் வாத்தியமாகவும் பக்கவாத்தியமாகவும் வாசிக்கப்படும் வாத்தியக்கருவி.
1. வயலின் 2. வீணை 3. தம்புரா 4. தவில் 5. நாதஸ்வரம்

14. விவாதி தோஷமற்ற மேள இராகங்களின் மொத்த எண்ணிக்கை.
1. 42 2. 36 3. 32 4. 72 5. 40

15. இரவீந்திரநாத்தாகூரால் ''சங்கீத கலாகோவிந்'' என அழைக்கப்பட்ட வாக்கேயகாரர்.
1. சுவாதிதிருநாள் மகாராஜா 2. பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்
3. மாரிமுத்தாப்பிள்ளை 4. கனம் கிருஷ்ணய்யர்
5. மைசூர் வாசுதேவாச்சாரியார்

16. வசந்தா இராகத்தின் தாய் இராகம் அடங்கும் சக்கரத்தின் பெயர் யாது?
1. இந்து 2. அக்னி 3. நேத்ர 4. பாண 5. ருது

17. புல்லாங்குழல் வாத்தியத்தில் ஊதும் துளை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
1. தும்பமுகம் 2. தாரரந்திரம் 3. விரல்துளை 4. முகரந்திரம் 5. நாதத்துளை

18. ஆபோகி இராகத்தின் ஆரோகண அவரோகணம்
1. ஸரிகமதநிஸ் - ஸ்நிதமகரிஸ 2. ஸரிகமதஸ் - ஸ்தமகரிஸ
3. ஸரிகபநிஸ் - ஸ்நிபகரிஸ 4. ஸகமதநிஸ் - ஸ்நிதமகஸ
5. ஸரிமபதஸ் - ஸ்தபமரிஸ

19. இணை ஸ்வரங்கள் அல்லது கிளை ஸ்வரங்கள் என்று அழைக்கப்படும் ஸ்வரங்கள்
1. வாதிஸ்வரங்கள் 2. அனுவாதி ஸ்வரங்கள் 3. விவாதி ஸ்வரங்கள்
4. சம்வாதி ஸ்வரங்கள் 5. அந்நியஸ்வரங்கள்

20. ஹிந்துஸ்தானி இசையில் உள்ள கஸல், தும்ரி, தரனா முதலிய உருப்படிகள் கர்நாடக இசையில் எந்த உருப்படிகளுக்கு முறையே ஒப்பிடப்படுகின்றன?
1. ஜாவளி, தில்லானா, பதம் 2. தில்லானா, பதம், ஜாவளி 3. பதம், ஜாவளி, தில்லானா
4. ஜாவளி, பதம், தில்லானா 5. பதம், தில்லானா, ஜாவளி

21. உலகப் பிரசித்தி பெற்ற "கற்பகவல்லிநின் பொற்பதங்கள் பிடித்தேன்….." என்ற இராகமாலிகையைப் பாடிய இலங்கைக் கலைஞர்

1. N.K.பத்மநாதன் 2. பிரம்மஸ்ரீ ம.த.ந.வீரமணிஐயர் 3. N.S.உருத்திராபதி
4. வி.காமாட்சிசுந்தரம் 5. P.S.ஆறுமுகம்பிள்ளை

22. இருவரிடையே நடைபெறும் உரையாடலைச் சித்தரிக்கும் தரு

1. சம்வாததரு 2. ஜக்கினிதரு 3. ஸ்வாகததது
4. வருணனை தரு 5. உத்தர பிரதியுக்தரதர

23. திருவாசகம் பாடப்படும் இராகம் எது?

1. நவரோஜ் 2. மத்தியமாவதி 3. மோகனம் 4. ஆனந்தபைரவி 5. கரிகாம்போதி

24. தாண்டகவேந்தர், தாண்டகசதுரர் எனச் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுபவர்.

1. திருஞானசம்பந்தர் 2. அருணகிரிநாதர் 3. சுந்தரமூர்த்திநாயனார்
4. மணிவாசகர் 5. திருநாவுக்கரசர்

25. நடுச்செவியின் முக்கிய பாகமாகிய நத்தைச்சுருளின் நீளம் யாது?

1. 3.8 *cm* 2. 3.1 *cm* 3. 2.9 *cm* 4. 3.2 *cm* 5. 3.15 *cm*

26. மேலைத்தேச இசையின் அடிப்படையான இராகம் மேஜர் ஸ்கேல் (Major scale) வட இந்திய இசையில் எவ்வாறு அழைக்கப்படும்?

1. பூர்வி 2. யமன் 3. மார்வா 4. பைரவ் 5. பிலாவல்

27. தாளம் தொடங்குவதற்கு முன்னர் பாடல் ஆரம்பிக்கும் க்ரகம் எவ்வாறு அழைக்கப்படும்?

1. சமக்ரகம் 2. அநாகதக்ரகம் 3. அதீதக்ரகம் 4. அனுக்கிரகம் 5. க்ரகவிராமம்

28. "முவ்வகோபால" என்ற முத்திரையை உடைய வாக்கேயகாரர் யார்?

1. வேங்கடமகி 2. சாரங்கதேவர் 3. க்ஷேத்ரக்ஞர் 4. ஜெயதேவர் 5. கோவிந்தமகி

29. 72 மேளகர்த்தா அட்டவணையில் 12 சக்கரங்கள் தொடர்பான கூற்றுக்களில் ருத்ர சக்கரத்துக்கு மிகப் பொருத்தமான கூற்றுக்களைக் கொண்ட தொகுதி

A. சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம் ஆகிய ஸ்வரஸ்தானங்களைக் கொண்ட சக்கரம்
B. 55 - 60 வரையான இராகங்களை உள்ளடக்கிய சக்கரம்.
C. பாண சக்கரத்தின் நேர் பிரதிமத்யம சக்கரம்
D. 12 சக்கரங்களில் 8 வது சக்கரமாக அமைந்துள்ளது.
E. எல்லாம் தீவிர ஸ்வரங்களைக் கொண்ட இராகம் அமைந்துள்ள சக்கரம்

1. A,B,C 2. A,C,E 3. A,B,D 4. B,C,E 5. C,D,E

30. இசை நடன நாட்டிய நிகழ்ச்சிகளில் பிரதான தாள வாத்தியமாக விளங்கும் தாளவாத்தியம்

1. கெஞ்சிரா 2. தவில் 3. கடம் 4. மிருதங்கம் 5. முகர்சிங்

31. ஹிந்துஸ்தானி சங்கீதத்திலிருந்து கர்நாடக சங்கீதத்திற்கு வந்த இராகம்.

1. ஆபோகி 2. மோகனம் 3. சிந்துபைரவி 4. சுத்தசாவேரி 5. பைரவி

The National e-learning Portal for The General Education

32. சுந்தரமூர்த்தி நாயனாரால் மட்டும் பயன்படுத்தப்பட்ட பண்வகை
1. மேகராகக்குறிஞ்சி 2. யாழ்முரி 3. செவ்வழி 4. செந்துருத்தி 5. கொல்ல

33. தியாகராஜரது நௌகா சரித்திரத்தினை தமிழில் மொழிபெயர்த்த இசைக்கலைஞர்
1. போராசிரியர்.P.சாம்பமூர்த்தி
2. ஊத்துக்காடு வெங்கடஸுப்பய்யர்
3. என்.எஸ்.உருத்திராபதி
4. மைசூர்.டி.சௌடையா
5. செம்பை வைத்தியநாதபாகவதர்

34. சுருதிக்ககாகப் பயன்படுத்தப்படும் தந்தி வாத்தியம் எது?
1. வீணை 2. வயலின் 3. சாரங்கி 4. தம்புரா 5. ஸிதார்

35. டமருக ஜதி வேறு எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
1. ஸ்ரோதோவகஜதி 2. வேதமத்திமஜதி 3. சமஜதி
4. மிருதங்கஜதி 5. கோபுச்சஜதி

❖ **36 - 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் விடை தருக.**

A. பிரம்மஸ்ரீ ம.த.ந.வீரமணி ஐயர்
B. என்.கே.பத்மநாதன்
C. செல்வி.இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
D. குப்பிளான் எஸ்.செல்லத்துரை
E. இசைப்புலவர் என்.சண்முகரத்தினம்

36. திருகோணமலை தட்சிண கான சபாவை ஆரம்பித்து வளர்த்தெடுத்த பெருமைக்குரிய கலைஞர்
1. A 2. B 3. C 4. D 5. E

37. "வெண்கலக் குரல்" என்று இரசிகர்களால் விமர்சித்துக் கூறப்பட்ட குரலுக்குச் சொந்தக்காரரும், இராமநாதன் நுண்கலைக்கழகம், வடஇலங்கை சங்கீத சபை ஆகியவற்றின் தேர்வாளராகவும் பணியாற்றிய இசைக்கலைஞர்.
1. A 2. B 3. C 4. D 5. E

38. பண்ணிசைவாணர், இசைவல்லார் போன்ற பட்டங்கள் சூட்டிக் கௌரவிக்கப்பட்ட பண்ணிசைக் கலைஞர்
1. A 2. B 3. C 4. D 5. E

39. கர்நாடக சங்கீதத்தையும் பரதத்தையும் திறமையாகக் கற்று நல்லதோர் படைப்பாளியாகவும் விளங்கிய இலங்கைக் கலைஞர்
1. A 2. B 3. C 4. D 5. E

40. புகழ் பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்றான நல்லூர் முருகன் ஆலயத்தில் தேவஸ்தான வித்துவானாக நாற்பது வருடங்களுக்கு மேல் நாதஸ்வரம் இசைத்த இசைக்கலைஞர்.
1. A 2. B 3. C 4. D 5. E

41. அலாவுதீன்கான், பாண்டிட்ராம் நாராயணன, அப்துல்லதீப்கான், துருபகோஷ் ஆகியோரால் வாசிக்கப்பட்ட வாத்தியம்
1. ஸாரோட் 2. ஸாரங்கி 3. ஸிதார் 4. கிற்றார் 5. பியானோ

e-thaksalawa The National e-Learning Portal for The General Education

42. “பஞ்சசாமரம்” என்ற வர்ணமெட்டு அமைந்துள்ள இராகம்
1. பைரவி 2. கமாஸ் 3. ஆனந்தபைரவி 4. பெகாக் 5. சாரங்கா

43. குசேலோபாக்கியானம், அஜாமிலோபாக்கியானம் ஆகிய ஹரிகதைகளை இயற்றிய வாக்கேயகாரர்
1. தியாகராஜ சுவாமிகள் 2. ஷேத்ரக்ஞர் 3. ஜெயதேவர்
4. சாரங்கதேவர் 5. ஸ்வாதிதிருநாள் மகாராஜா

44. ஜண்டை ஸ்வரங்களில் வரும் முதல் ஸ்வரத்தை சாதாரணமாகவும் இரண்டாவது ஸ்வரத்தை அடித்தும் பிடிக்கையில் வரும் கமகம்
1. டாலு 2. ஆஹதம் 3. மூர்ச்சனை 4. கம்பிதம் 5. ஸ்புரிதம்

45. சாரங்கதேவர் இயற்றிய வேதாந்த நூலின் பெயர்.
1. அத்யாத்மவிவேகம் 2. சங்கீதரத்னாகரம் 3. சங்கீதசாகரம்
4. ராகவிபோததியாயா 5. பிரபந்த தியாயா

46. கீழ்வரும் இராகங்களுள் வர்ஜராகம், வக்ரராகம், பாஷாங்க ராகம் ஆகிய மூன்று ஜன்னியராகப் பிரிவுகளுக்கும் உதாரணமாக அமைந்துள்ள இராகம்.
1. மோகனம் 2. கமாஸ் 3. முகாரி 4. ஸாரங்க 5. ஸ்ரீரஞ்சனி

47. தாளத்தினை இரண்டு களையாகப் போட்டுப் பாடப்படும் உருப்படி வகைகளைக் கொண்ட தொகுதி
1. வர்ணம், சௌக்ககாலக்கிருதி 2. சௌக்ககாலக்கிருதி, மத்திமகாலக் கிருதி
3. மத்திமகாலக்கிருதி, வர்ணம் 4. சௌக்ககாலக்கிருதி, தில்லானா
5. வர்ணம், தில்லானா

48. “ஸ்வாமி நானுன்றன் அடிமை” என்ற பதவர்ணம் பாடப்படும் இராகம் எது?
1. நாட்டை 2. ஷண்முகப்பிரியா 3. ஆபோகி 4. ஸ்ரீரஞ்சனி 5. நாட்டைக்குறிஞ்சி

49. சீவாளி என்ற பகுதியைக் கொண்ட வாத்தியக் கருவி எது?
1. தம்புரா 2. வயலின் 3. நாதஸ்வரம் 4. வீணை 5. தவில்

50. ஹிந்துஸ்தானி இசையில் புர்வி தாட்டுக்கு இணையான கர்நாடக சங்கீத இராகம்
1. காமவர்த்தனி 2. கரஹரப்பிரியா 3. கமனச்ரம 4. சுபபந்துவராளி 5. ஹனுமதோடி

(50 x 2 = 100 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | சங்கீதம் | நேரம் :- இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி – II

❖ பகுதி "அ" விலிருந்து இரண்டு வினாக்களுக்கும், பகுதி "ஆ" விலிருந்து மூன்று வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி "அ"

01. i. வாத்தியத்திரயத்தில் வரும் தாளவாத்தியம் எது?

ii. அதனை வாசித்துப் புகழ்பெற்ற இலங்கை, இந்திய கலைஞர்கள் இருவர் வீதம் எழுதுக.

iii. அவ்வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிக்க.

iv. அவ்வாத்தியத்தைச் சுருதி சேர்க்கும் முறையையும் வாசிக்கும் முறையையும் எழுதுக.

02. i. ஜனக இராகத்தின் நான்கு இலட்சணங்களையும் எழுதுக.

ii. ஜன்னிய இராகப் பிரிவுகளை எழுதுக.

iii. அவற்றுள் இரண்டினை விரிவாக உதாரணம் தந்து விளக்குக.

iv. ஸ்வராந்தர இராகம் என்னும் பதத்தை விளக்கி உதாரணம் தருக.

03. i. ஸப்த தாளங்களையும் அதன் அங்க அடையாடங்களையும் ஒழுங்காக எழுதுக.

ii. லகுவின் ஜாதி பேதங்களை குறியீடுகளுடன் ஒழுங்காக எழுதுக.

iii. லகுவின் ஜாதி பேதத்தினால் 35 தாளங்கள் உண்டாகும் முறையை விரும்பிய ஒரு தாளத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

iv. கதி பேதத்தினால் 175 தாளங்கள் உண்டாகும் முறையை விரும்பிய ஒரு தாளத்தை உதாரணமாகக் கொண்டு விளக்குக.

The National e-Learning Portal for The General Education

## பகுதி "ஆ"

04. கீழ்வரும் இராகங்களைக் கண்டுபிடித்து எழுதுக.

i. தீட்சிதர் சம்பிரதாயப்படி தேவக்கிரியா என்றழைக்கப்படும் இராகம்.

ii. 21 வது மேள இராகம்

iii. ஸபமபதநிஸ் - ஸ்நிதபகாம*கரிஸ என்ற ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம்

iv. 17 வது மேளராகத்தின் ஜன்னியராகமான ஔடவ ஷாடவ இராகம்

இவற்றுள் இரண்டினைத் தெரிவு செய்து அவற்றின் இலட்சணங்களை விரிவாக எழுதுக.
(உருப்படிகள், சஞ்சாரம் எழுதப்பட வேண்டும்)

05. i. "பால்வடியும் முகம் ….." என்ற பதத்தினை இயற்றிய வாக்கேயகாரர் யார்?

ii. இவர் இயற்றிய பாடல்கள் நான்கு எழுதுக.

iii. இவரது வரலாறு, இசைப்பணிகளை விரிவாக எழுதுக.

06. கர்நாடக இசை, ஹிந்துஸ்தான் இசை என்பவற்றுக்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை கீழ்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்ந்து எழுதுக.

i. இராகங்கள்

ii. உருப்படிகள்

iii. தாளங்கள்

iv. வாத்தியக்கருவிகள்

07. கீழே தரப்பட்ட உருப்படிகளில் இரண்டினைத் தெரிவு செய்து அவற்றின் இலட்சணங்களை விரிவாக உதாரணம் தந்து எழுதுக.

i. பதம் ii. தில்லானா iii. தேவாரம் iv. தரு

08. காது, குரல்வளை ஆகியவற்றின் தொழிற்பாடுகளை விபரிக்க.

The National e-learning Portal for the General Education